# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 188 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 04.10.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# “தவெக வேட்பாளரை உருவக்கேலி செய்வதா?” மு.க.ஸ்டாலினுக்கு முதலமைச்சர் விஜய் கண்டனம்



சென்னை:

"தாராபுரம் தொகுதி வேட்பாளரான சகோதரி சத்தியபாமா குறித்து, உருவக் கேலி செய்து, மிகவும் அநாகரிகமாகப் பேசிப் புளகாங்கிதம் அடைந்துள்ளார் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின். தொடர்ந்து பெண்களை ஆபாசமாகப் பேசி வரும் திமுகவுக்கு தமிழகப் பெண்களின் மகனாக, அண்ணனாக, தம்பியாக எனது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என தவெக தலைவரும், முதல்வருமான விஜய் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "தாராபுரம் தொகுதி இடைத்தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டம் என்ற பெயரில், தீய சக்தியான திமுக சார்பில் ஓர் அவதூறு மற்றும் அநாகரிகக் கூட்டத்தை நடத்தியுள்ளார், அதன் தலைவர் மு.க.ஸ்டாலின்.

நமது தாராபுரம் தொகுதி வேட்பாளரான சகோதரி சத்தியபாமா குறித்து, உருவ கேலி செய்து, மிகவும் அநாகரிகமாகப் பேசிப் புளகாங்கிதம் அடைந்துள்ளார். திமுக சார்பாக வளர்க்கப்பட்டு வரும் ஆபாசநதியை, வன்மநதியை, வக்கிரநதியை உருவாக்கியதே முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆகிய தான்தான் என்பதைப் பெருமையுடன் மார்தட்டி மகிழ்வுடன் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்.

ஜனநாயகத்திற்கு விரோதமானவர்கள் திமுகவினர். ஆபாசமும் வன்மமும் வக்கிரமும் திமுகவின் மூலக்கூறிலும் மூளைக்கூறிலும் கலந்திருப்பதைத் தமிழக மக்கள் அனைவரும் காலங்காலமாக உணர்ந்தே வைத்திருக்கின்றனர்.

பெண்களைப் பற்றி ஆபாசமாகப் பேசுவதில், அதிலும் பெண்களை அருகில் வைத்துக்கொண்டே, அவர்கள் அருவருப்பாக உணர்வதைக்கூட கண்டுகொள்ளாமல் பேசுவதில் வல்லவர்களான இந்தத் தீய சக்திக் கூட்டத்திற்குத் தமிழக மக்களும் தாராபுரம் தொகுதி மக்களும் தக்க பதிலடியைக் கொடுக்கத்தான் போகின்றனர்.

தொடர்ந்து பெண்களை ஆபாசமாகப் பேசி வரும் தீய சக்தி திமுகவிற்குத் தமிழகப் பெண்களின் மகனாக, அண்ணனாக, தம்பியாக எனது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்" எனக் குறிப்பிட்டு உள்ளார்.

# 100 சார்பதிவாளர் அலுவலகங்களில் சனிக்கிழமை கட்டாய பணி நவ.1 முதல் ரத்து




சென்னை: தமிழக வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலர் ஜெ.குமரகுருபரன் வெளியிட்ட அரசாணையில் கூறியிருப்பதாவது: கடந்த 2022-ம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணையின் படி, அலுவலகங்களில் பணியாற்றும் பொது மக்கள் ஆவணப்பதிவு மேற்கொள்ள ஏதுவாக வார விடுமுறை நாளான சனிக்கிழமைகளில் சார்பதிவாளர் அலுவலகங்கள் செயல்படவும், அந்த அலுவலகங்களில் அதன் வேலைப்பளுவுக்கு தகுந்தவாறு தேவையான பணியாளர்கள் பணியாற்ற சம்பந்தப்பட்ட மாவட்ட பதிவாளர்களுக்கு உத்தரவிடவும் பதிவுத்துறை தலைவருக்கு அனுமதியளிக்கப்பட்டது. இந்நிலையில், கடந்த செப்.8-ம் தேதி தமிழக அரசுக்கு பதிவுத்துறை தலைவர் எழுதிய கடிதத்தில், "எங்கிருந்தும் பதிவு என்ற குறிக்கோளை எய்தும் வகையில், சார்பதிவாளர்கள் ஆவணப்பதிவு மட்டுமின்றி பல்வேறு கூடுதல் நிர்வாகப் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, சனிக்கிழமைகளில் ஆவணப்பதிவு காரணமாக அலுவலகப் பணிகளில் பின்னடைவு ஏற்படுகிறது. வரும் காலங்களில் அனைத்து ஆவணங்களும் வருகையில்லா பதிவு, காகிதமில்லா முறையில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளதால், தற்போது 100 சார்பதிவாளர் அலுவலகங்களில் நடைமுறையில் உள்ள சனிக்கிழமை கட்டாயப்பணி என்பதை கைவிடலாம் என்ற சட்டப்பேரவையில் அமைச்சர் வெளியிட்ட அறிவிப்பை நவ.1-ம் தேதி முதல் செயல்படுத்தலாம்.

இதற்காக 2022-ல் பிறப்பிக்கப்பட்ட அரசாணையை ரத்து செய்ய வேண்டும்" என்று கோரியிருந்தார். இதைப் பரிசீலித்த தமிழக அரசு, பதிவுத்துறை தலைவரின் கருத்துகளை ஏற்று, சனிக்கிழமைகளில் செயல்படும் 100 சார்பதிவாளர் அலுவலகங்கள் நவ. 1-ம் தேதி முதல் வார நாட்களில் மட்டுமே செயல்படும். சனிக்கிழமை கட்டாயப்பணி முறையை கைவிட முடிவெடுத்து உத்தரவிடப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானை வீழ்த்தி தங்கம் வென்றது இந்திய கிரிக்கெட் அணி



நிஷின் (ஜப்பான்): ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இன்று நடைபெற்ற ஆடவர் கிரிக்கெட் இறுதி ஆட்டத்தில், பாகிஸ்தானை வீழ்த்தி இந்தியா தங்கப் பதக்கம் வென்றது. இதன்மூலம் 2023 சீனாவின் ஹாங்சோ ஆசிய விளையாட்டு போட்டிகளில் வென்ற தங்கத்தை இந்தியா தக்கவைத்துக் கொண்டது.

20-வது ஆசிய விளையாட்டு போட்டி ஜப்பானின் ஐச்சி - நகோயா மாகாணத்தில் நடைபெற்று வருகிறது. இன்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் பாகிஸ்தானுக்கு எதிராக இந்திய அணி டாஸ் வென்று பேட்டிங்கை தேர்வு செய்தது.

இந்திய அணியில் அதிகபட்சமாக அபிஷேக் ஷர்மா 61 ரன்கள் மற்றும் திலக் வர்மா ஆட்டமிழக்காமல் 51 ரன்கள் எடுத்தனர். இதன் காரணமாக இந்திய அணி 20 ஓவர்களில் 211 ரன்கள் என்ற வலுவான ஸ்கோரை எட்டியது.

212 என்ற இலக்கை நோக்கி விளையாடிய பாகிஸ்தான் அணிக்கு இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள் கடும் நெருக்கடியை அளித்தனர். ஆனாலும், பாகிஸ்தான் அணியின் ஹசன் நவாஸ் சிறப்பாக விளையாடி 96 ரன்கள் குவித்தார். அவர் இறுதிவரை போராடியும் இந்திய அணியின் பந்துவீச்சு, பாகிஸ்தானை சுருட்டியது.

இந்தியா சார்பில் அக்சர் படேல், ஷிவம் துபே மற்றும் வாஷிங்டன் சுந்தர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இதன் காரணமாக பாகிஸ்தான் அணி 20 ஓவர் முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 192 ரன்கள் மட்டுமே எடுத்து தோல்வியை தழுவியது.

இந்த வெற்றியின் மூலம் ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியாவின் தங்கப் பதக்கங்களின் எண்ணிக்கை 19 ஆக உயர்ந்துள்ளது.

## இந்திய மகளிர் ஹாக்கி அணி ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்றது

ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற இந்திய மகளிர் ஹாக்கி அணிக்கு, ஹாக்கி இந்தியா அமைப்பு மற்றும் ஒடிசா மாநில முதலமைச்சர் மோகன் சரண் மாஜி ஆகியோர் பரிசுத்தொகைகளை அறிவித்துள்ளனர்.

சீனாவுக்கு எதிரான விறுவிறுப்பான இறுதி ஆட்டத்தில் 1-0 என்ற கோல் கணக்கில் இந்திய மகளிர் ஹாக்கி அணி அபார வெற்றி பெற்று, வரலாற்றுச் சிறப்புமிக்க தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றி சாதனை படைத்துள்ளது. இதன் மூலம், 1982-ஆம் ஆண்டிற்குப் பிறகு சுமார் 44 ஆண்டுகள் கழித்து ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்றுள்ளதோடு, 2028 லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கும் நேரடியாகத் தகுதி பெற்று இரட்டைச் சாதனை படைத்துள்ளது.

இப்போட்டியில் வீராங்கனை லால்ரெம்சியாமி அடித்த



துல்லியமான கோலும், கோல்கீப்பர் சவிதா புனியா தடுத்த பெனால்டி ஸ்ட்ரோக்கும் இந்தியாவின் வெற்றிக்கு முக்கிய வழிவகுத்தன. தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்த இந்திய மகளிர் அணிக்கு நாடு முழுவதிலும் இருந்து வாழ்த்துகள் குவிந்து வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, ஹாக்கி இந்தியா அமைப்பு வீராங்கனைகளுக்குப் பரிசுத்தொகை அறிவித்துக் கௌரவித்துள்ளது. அதன்படி, இந்திய அணி வீராங்கனைகள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.11 லட்சம் பரிசுத்தொகை வழங்கப்படும் என்று ஹாக்கி இந்தியா அமைப்பு அறிவித்துள்ளது. அத்துடன், வீராங்கனைகளின் வெற்றிக்கு உந்து சக்தியாகத் திகழ்ந்த தலைமைப் பயிற்சியாளர் உள்ளிட்ட உதவிப் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.5.5 லட்சம் ஊக்கத்தொகையாக வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, ஒடிசா மாநில முதலமைச்சர் மோகன் சரண் மாஜியும் மகளிர் ஹாக்கி அணிக்குப் பரிசுத்தொகையை அறிவித்துள்ளார். ஒடிசா முதலமைச்சரின் அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி, தங்கப் பதக்கம் வென்று நாட்டிற்குப் பெருமை சேர்த்த இந்திய மகளிர் ஹாக்கி அணியின் ஒவ்வொரு வீராங்கனைக்கும் தலா ரூ.11 லட்சமும், தலைமைப் பயிற்சியாளர் உள்ளிட்ட உதவிப் பணியாளர்களுக்கு தலா ரூ.5.5 லட்சமும் பரிசுத்தொகையாக வழங்கப்படவுள்ளது.

இது குறித்து ஒடிசா முதலமைச்சர் தனது எக்ஸ் பதிவில், "ஆசிய விளையாட்டுப் போட்டியில் வரலாற்றுச் சிறப்புமிக்க தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்த இந்திய மகளிர் ஹாக்கி அணிக்கு என்னுடைய வாழ்த்துகள். இந்திய அணியின் இந்தச் சிறப்பான செயல்பாடு ஒட்டுமொத்த தேசத்திற்கும் பெரும் பெருமிதத்தைத் தேடித் தந்துள்ளது. இந்திய ஹாக்கி விளையாட்டுடன் எப்போதும் உறுதியுடன் துணை நிற்கும் ஒடிசா அரசு, விளையாட்டில் சிறந்து விளங்குபவர்களைத் தொடர்ந்து ஆதரிப்பதிலும், அவர்களை ஊக்குவிப்பதிலும் தனது முழு அர்ப்பணிப்பைத் தொடரும்" என்று பதிவிட்டுள்ளார்.


செய்திகள் உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# தென்காசி ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் சட்ட விழிப்புணர்வு முகாம் மற்றும் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது



தென்காசி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள கூட்டரங்கில் வைத்து மூத்த குடி மக்களுக்கான சட்ட விழிப்புணர்வு மற்றும் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு (சென்னை) 2026-2 027ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தின்படி, தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் சார்பில் மூத்த குடி மக்களுக்கான சட்ட விழிப்புணர்வு முகாம் மற்றும் இலவச மருத்துவ முகாம் சிறப்பாக நடைபெற்றது. தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின்செயலாளர் எஸ்.முருகவேல் முன்னிலையில்,மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் தலைவர் பி.இராஜவேல் வழிகாட்டுதலின் படி இம்முகாம் ஒருங்கிணைக்கப் பட்டது. இதில் தென்காசி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள கூட்டரங்கில் வைத்து (01.10.2026) காலை 10.00 மணியளவில் நிகழ்ச்சி தொடங்கியது.

இதில் தென்காசி குற்றவியல் நீதித்துறை நடுவர் எஸ்.முத்துலட்சுமி மற்றும் 100 வழக்கறிஞர்கள் 50 நீதித்துறை ஊழியர்கள் சட்டம் சார்ந்த தன்னார்வலர் மற்றும் 20 பொதுமக்கள் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.

# அச்சிறுப்பாக்கம் மழை மலை மாதா ஆலயம் 58 ஆம் ஆண்டு அருள் விழா கொடியேற்றத்துடன் துவக்கம்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அச்சிறுப்பாக்கம் பள்ளிப்பேட்டை மலை அடிவாரத்தில் மழை மலை மாதா ஆலயம் உள்ளது.

இந்த ஆலயத்தில் ஆண்டுதோறும் கொடியேற்றத்துடன் தேர் திருவிழா நடைபெறுவது வழக்கம்

அதேபோன்று இந்த ஆண்டும் 58 ஆம் ஆண்டு கொடியேற்றத்துடன் தேர்த்திருவிழா நடைபெற உள்ளது.

நற்கருணை ஆராதனை மற்றும் திருப்பலி வழிபாடுகள் மாலை 6:00 மணியளவில்கொடியேற்றம்விழா வெகு விமர்சையாக நடைபெற்றது அதனைத் தொடர்ந்து 2 ந் தேதி திருவுடல் நடைபெற உள்ளது.

3 ந்தேதி தேர் திருவிழா வீதி உலா நடைபெற உள்ளது பின்பு 4 ந் தேதி மழை மலை மாதா தேர் ஆலயத்தில் வந்தடைந்தாலும் சிறப்பு திருப்பலிகள் மாலை கொடி இறக்கம் நடைபெற உள்ளது.

கொடியேற்றம் விழாவில் உள்ளூர் மற்றும் வெளியூரிலிருந்து ஏராளமான பத்தர்கள் கலந்து கொண்டனர்.

## ஆலங்குளம் அருகே கிராமசபை கூட்டத்தில் பரபரப்பு

# குடிநீர் இணைப்பு முறைகேடு குறித்து சமூக ஆர்வலர்கள் குற்றச்சாட்டு



தென்காசி மாவட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், வடக்கு காவலாகுறிச்சி கிராமத்தில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு கிராமசபை கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஊராட்சி மன்றத் தலைவர் பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார்.

துணைத்தலைவர் சிவன்துரை, பற்றாளர் அழகுதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஊராட்சி செயலர் மாரித்துதீர்மானங்களை வாசித்தார்.

கூட்டத்தில் ஜல் ஜீவன் திட்டத்தில் முறைகேடாக குடிநீர் இணைப்பு வழங்கியதாகவும் முன் பணம் வாங்கியது முறை கேடு, வீடு வழங்கியதில் முறைகேடுஅரசுநிதியை முறைகேடக பயன்படுத்தியது போன்ற குற்றச்சாட்டை

பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள்

தட்டப்பாறை எம். ஐயாதுரை பாண்டியன், தலைமையில் ருக்குமணியம்மாள் புரம் மணிகண்டன், வக்கீல் பத்மநாபன் , கிருஷ்ணசாமி, முருகையா, அழகுதுரை, காவலாகுறிச்சி அய்யாதுரை, சாமிதுரை , ஒன்றிய கவுன்சிலர் முத்துமாரி ரமேஷ், கனகராஜ், கனேஷ்வரி, கருப்பசாமி , மற்றும்பெண்கள் ஆண்கள்.உள்பட பலர் முன் வைத்தனர்.

இதனால் கூட்டத்தில் பஞ்சாயத்து தலைவருக்கும் சமூக ஆர்வலர்களுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு தள்ளு முள்ளு ஏற்பட்டு பொது மக்களுக்கும் பரபரப்பு ஏற்பட்டு,

அங்குள்ள காவல் துறையினர் இரு தரப்பினரையும் சமதனபடுத்தினர் கிராமசபை கூட்டம் முழுமையாக நடைபெற முடியாத நிலை ஏற்பட்டது.

இதையடுத்து ஆலங்குளம் வட்டார வளர்ச்சி அலுவலர் முருகேசன் கிராமசபை கூட்டத்தை மீண்டும் , பொதுமக்களிடம் சுமார் 6-மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அதனை தொடந்து பேச்சுவார்த்தையில் அனைத்து முறைகேடு களை ஆய்வுக்கு உட்படுத்தபடும்

ஊராட்சி செயலர் மாற்றம் மற்றும் மாவட்ட அளவிலான மறு தணிக்கை மற்றும் கிராம நீர் தேக்க தொட்டி உடனடி சரிசெய்தல் மற்றும் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்ற BDO உறுதி அளித்தனர், கிராம சபையில் கோரப்பட்ட அனைத்து. ஆவணங்களும் ஒரு வார காலத்திற்குள் கொடுக்கப்படும் என வட்டார வளர்ச்சி அலுவலர் உறுதி அளித்ததை தொடர்ந்து மாலை 6 மணி அளவில் கிராம சபை கூட்டம் நிறைவுக்கு வந்ததை தொடர்ந்து கூட்டத்தில் அனைவரும் கலைந்து சென்றனர்

நிகழ்வில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் உஷா, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சுந்தர்ராஜ், கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர், நியாய விலைக் கடை ஊழியர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# குமாரபாளையத்தில் காந்தி ஜெயந்தி விழா



நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் சின்னப்பநாயக்கன்பாளையம் *நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் தளிர்விடும் பாரதம் அறக்கட்டளை சார்பில் காந்தி ஜெயந்தி விழா* கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு தளிர்விடும் பாரதம் அறக்கட்டளையின் தலைவர் சீனிவாசன்* தைமை வகித்தார்.

பொருளாளர் சின்னையன்* அனைவரையும் வரவேற்றார்.

துணைத்தலைவர் வரதராஜன், சரண்யா, தமிழ்செல்வி ஜெயஸ்ரீ, தினேஷ்ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் காந்தியிடம் நாம் கற்றதும் பெற்றதும் என்றதலைப்பில் பேச்சுப் போட்டி, மாறுவேடப் போட்டிகள் நடைபெற்றது.

சிறப்பு அழைப்பாளர்களாக குமாரபாளையம் காவல் உதவி ஆய்வாளர் மாதேஸ்வரன், தமிழ் சிந்தனை பேரவை ரமேஷ்குமார் ஆகியோர் கலந்துகொண்டு*விழிப்புணர்வு சொற்பொழிவாற்றி* போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு கேடயமும், பாராட்டு சான்றிதழ்களும், மேலும் போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் பங்கேற்பு சான்றிதழ்கள் வழங்கி சிறப்பித்தனர்.

விழாவில் குமாரபாளையம்சுற்றுவட்டாபகுதிகளில் உள்ள பள்ளி மாணவ மாணவியர் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இனிவரும் காலங்களில் காந்தியின் வழியில் நாமும் நடப்போம் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

முடிவில் தளிர்விடும் பாரதம்செயலாளர்பிரபு* அனைவருக்கும் நன்றி கூறினார்.

## முன்னாள் முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவின்படி

# தடகளப் போட்டியிலும் தங்கம் வென்று சாதனை படைத்த அபிநயா ராஜராஜனுக்கு ஆண்டுக்கு 30 லட்சம் ரூபாய் வழங்கினர்

ஜப்பானில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெண்கல பதக்கம் வென்றும் அதற்கு முன்பு உசுப்பேக்கிஸ்தான் நாட்டில் நடைபெற்ற தடகளப் போட்டியில் தங்கப் பதக்கங்கள் வென்றும் கொரியாவில் நடைபெற்ற தடகளப் போட்டியிலும் தங்கம் வென்று சாதனை படைத்த அபிநயா ராஜராஜன் அவர்கள் திறமையை பாராட்டி அவருடைய விளையாட்டு ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் மேற்கொண்டு அவருடைய திறமையை வளர்க்கிற வகையில் ஆண்டுக்கு 30 லட்சம் ரூபாய் வழங்கி மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் தளபதியார் அவர்களும் துணை முதலமைச்சர் மாண்புமிகுதுணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் வழங்கிஅபிநயா அவர்களின் விளையாட்டு ஆர்வத்தை ஊக்குவித்தார்கள்

தற்போது ஜப்பானில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப்போட்டியில் அபிநயா ராஜராஜன் அவர்கள் அவர்கள் வெங்கல பதக்கம் வென்று இந்தியாவிற்கு பெருமை சேர்த்து தமிழகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்

நேற்று இரவு சொந்த கிராமமான கல்லுத்திற்கு வருகிறபோது ஆலங்குளம் பொதுமக்கள் சார்பிலும்பெருந்தலைவர் காமராஜர் சிலை பாதுகாப்புக்குழு ஆலங்குளம் வியாபாரிகள் சங்கம் ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கம் வேன் கார் ஓட்டுநர்கள் சங்கம் ஆலங்குளம் பத்திரிகையாளர்கள் சங்கம் லயன்ஸ் கிளப் ஆகியவைகளின் சார்பில் ஆலங்குளம்பெருந்தலைவர் காமராஜர் சிலை அருகில் அபிநயா ராஜராஜன் அவர்களுக்கு மேளதாளம்முழங்கவானவேடிக்கையோடு சோனா மகேஷ் அவர்கள் தலைமையில் வரவேற்பு வழங்கப்பட்டது அதன் பின்னர் பெருந்தலைவர் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து சிறப்பு செய்தனர்

அந்தவரவேற்புநிகழ்ச்சியில் பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்களும் கலந்து கொண்டு வாழ்த்துக்கள் தெரிவித்து கொண்டாடை அணிவித்தும் மகிழ்ந்தனர்

அதன் பின்னர் அவரது சொந்த ஊரான கல்லூத்திற்கு வருகை தந்தார் அவருக்கு ஊர் எல்லையில் இருந்து மேளதாளத்துடன் வரவேற்பு வழங்கப்பட்டது

அதனைத் தொடர்ந்து இன்று முன்னாள் மாவட்ட திமுக செயலாளர் சிவ பத்மநாதன் அவர்கள் தலைமையில் அபிநயா ராஜராஜன் அவர்கள் இல்லம் சென்று பொன்னாடை அணிவித்து மகிழ்ச்சியை தெரிவித்தார்

ஆலங்குளம் முன்னாள் பேரூராட்சி துணைத் தலைவர் தங்கம் நகைக்கடை அதிபர் தங்க செல்வம் அவர்கள் பொன்னாடை அணிவித்து தங்க காயின் வழங்கி அபிநயா ராஜராஜன் அவர்கள் இன்னும் பல போட்டிகளில் கலந்து கொண்டு தங்கம் வென்று நம் நாட்டிற்கும் நம் சொந்த மண்ணிற்கும் பெருமைசேர்க்க வேண்டும் என்று வாழ்த்தினார்.. நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட கழகச் செயலாளர் சிவ பத்மநாதன் ஆலங்குளம் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் தங்க செல்வம் மாவட்ட மாணவரணி முன்னாள் துணை அமைப்பாளர் தினேஷ் பாண்டியன் மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் பொன் மோகன்ராஜ் மாவட்ட பிரதிநிதி அன்பழகன் அபிநயா அவர்களின் தந்தை ராஜராஜன் மோகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வாழ்த்தினார்



# ப்ளமிங்கோஸ் ஃபார்மஸூட்டிக்கல்ஸ் புதிய தயாரிப்பு அறிமுகம்



புதுச்சேரி:

ப்ளமிங்கோஸ் ஃபார்மஸூட்டிக்கல்ஸ் சார்பில் ப்ரீபயாடிக்-ப்ரோபயாடிக் மூலக்கூறுகள் அடங்கிய புதிய உணவுப் பொருள் வகை தயாரிப்பு அறிமுக விழா மற்றும் மாதாந்திர சேல்ஸ் ரிவியூ கூட்டம் புதுச்சேரி சாணக்கியா அபார்ட்மெண்ட் வளாகத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு நிறுவன அலுவலக மேலாளர் திருமதி. அம்பிகா தங்கதுரை வரவேற்புரை வழங்கினார். நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு. டி. ஒஸ்தீன்ராஜா தலைமை தாங்கினார்.

சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு அனைத்து மருந்து உற்பத்தியாளர்கள் சங்கமாநிலத்தலைவரும், ஜி.டி.ஆர். குளோபல் ஹெல்த்கேர் நிறுவனத்தின் உரிமையாளருமான டாக்டர் தியாகராஜன் கலந்து கொண்டு, புதிய தயாரிப்பு மற்றும் அதன் சந்தைப்படுத்தல் உத்திகள் குறித்து சிறப்புரை யாற்றி னார்.

நிகழ்ச்சியில் நிறுவனத்தின் மெடிக்கல் ரெப்ரசென்டேட்டிவ்கள், சேல்ஸ் மேனேஜர்கள், ஜெனரல் மேனேஜர் மற்றும் அசிஸ்டண்ட் மேனேஜர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

புதிய தயாரிப்பை அனைவரும் உற்சாகத்துடன் வரவேற்றனர்.

நிகழ்ச்சியின் நிறைவில் நிறுவன சேல்ஸ் மேனேஜர் திரு.பிதாம்பரம் நன்றி கூறினார்.

# தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை மாநில செயலாளரும், தமிழக வெற்றிக் கழக பிரமுகருமான நாகர்கோவில் ஆர்.எஸ்.ராஜன் விடுத்துள்ள அறிக்கை:



தாராபுரம் இடைத்தேர்தலில் போட்டியிடும் . சத்யபாமா ஏற்கனவே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்.தனது அரசியல் நிலைப்பாட்டை மக்களிடம் நேரடியாக எடுத்துச் சொல்லும் வகையில் தனது பதவியை ராஜினாமா செய்து விட்டு மீண்டும் ஜனநாயக முறையில் மதச்சார்பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணி சார்பில் மக்களின் தீர்ப்பை நாடி இடைத்தேர்தலில் போட்டியிடுகின்றார்.

ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண் அரசியல்வாதி என்பதற்காக அவரை தனிப்பட்ட முறையில் விமர்சிப்பது ஜனநாயக அரசியலுக்கு அழகல்ல. அரசியல் கருத்து வேறுபாடுகள் ஆயிரம் இருக்கலாம், ஆனால் ஒரு பெண்ணின் சமூகப் பின்னணியையும், உருவ கேலியும், பெண்ணினத்தையும் அவரது அரசியல் முடிவையும் இழிவுபடுத்தும் வகையிலான விமர்சனங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. அதிலும் முன்னாள் முதலமைச்சர்.மு.க.ஸ்டாலின்.

சத்யபாமா தொடர்பாக தெரிவித்தஅருவருக்கத்தக்க கருத்துகளுக்கு விளக்கம் அளித்து தமிழக மக்களிடமும் தாராபுரம் வெற்றி வேட்பாளர். சத்யபாமாவிடம் உடனடியாக வருத்தம் தெரிவிக்கவேண்டும். இருக்கின்ற மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் திமுக தோல்வி பயத்தில் இருப்பதால்தான் திமுகதலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வீணாக அவதூறாக பேசி வருகிறார்.

தாராபுரம் மற்றும் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர்கள் இரண்டு பேரும் அமோக வெற்றி பெறுவது உறுதியாகி விட்டது. எனவே தான் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் உச்சகட்ட பதட்டத்தில் உள்ளார் என்பது இதன் மூலம் நிரூபணமாகி உள்ளது. ஜனநாயகத்தில் இறுதி தீர்ப்பு மக்களுடையது.

# நல்லூர் ஒன்றியத்தில் காந்தி ஜெயந்தியையொட்டி சிறப்பு கிராம சபை கூட்டங்கள்



கடலூர் மாவட்டம், நல்லூர் ஊராட்சி ஒன்றியத்துக்குள்பட்ட நல்லூர், சேப்பாக்கம், வேப்பூர், வரம்பனூர், பூலாம்பாடி, கோ.கொத்தனூர், சிறுநெசலூர், நகர், வண்ணாத்தூர் உள்ளிட்ட பல்வேறு கிராம ஊராட்சிகளில் அக்டோபர் 2 காந்தி ஜெயந்தியை முன்னிட்டு சிறப்பு கிராம சபை கூட்டங்கள் நடைபெற்றன. அந்தந்த ஊராட்சி செயலாளர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டங்களில் ஊராட்சி நிர்வாகத்தினர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

கூட்டங்களில் கிராமங்களின் அடிப்படை தேவைகள், குடிநீர், சாலை, தெருவிளக்கு உள்ளிட்ட அடிப்படை வசதிகள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கைகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. மேலும், கிராம மக்களிடம் கருத்துகள் மற்றும் கோரிக்கைகள் கேட்டறியப்பட்டு, அவற்றை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. வரம்பனூர் ஊராட்சியில் ஊராட்சி செயலாளர் ஜெயபிரகாஷ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலர் பெரியநாயகம் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார்.

பூலாம்பாடி ஊராட்சியில் நல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலர் கொளஞ்சி (கி.ஊ.) ஆலோசனைப்படி, ஊராட்சி செயலாளர் பானுப்பிரியா மணிகண்டன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இதில் ஊராட்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகள் குறித்து பொதுமக்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு, அவற்றை நிறைவேற்றுவது தொடர்பாக ஒருமனதாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதேபோல், நல்லூரில் திருநீலமணிகண்டன், சேப்பாக்கத்தில் தங்க சரவணன், வேப்பூரில் தங்க வெங்கடேசன் ஆகிய ஊராட்சி செயலாளர்கள் தலைமையில் சிறப்பு கிராமசபை கூட்டங்கள் நடைபெற்றன.

மேலும், கோ.கொத்தனூரில் கதிர்வேலு, சிறுநெசலூரில் சொக்கலிங்கம், நகரில் பெரியசாமி, வண்ணாத்தூரில் பாலு ஆகியோர் தலைமையில் கிராம சபை கூட்டங்கள் நடைபெற்றன. வேப்பூர் ஊராட்சியில் கிராமத்தில் நிலவும் பல்வேறு குறைபாடுகளை பொதுமக்கள் சுட்டிக்காட்டி, அவற்றை சரிசெய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினர். தொடர்ந்து, பொதுமக்களின் கருத்துகள் மற்றும் கோரிக்கைகளின் அடிப்படையில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு



மத்திய அரசின் கிராமப்புற அமைச்சக வழிகாட்டுதலின் படி கனரா வங்கி கிராமப்புற சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிலையம் நடத்தும் காளான் வளர்ப்பு பயிற்சி வருகிற 05.10.2026 முதல் 15.10.2026 வரை 10 நாட்கள் கனரா வங்கி ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிலையம் அரசு பொறியியல் கல்லூரி(IRTT) சாலை, வாசவி கல்லூரி அருகில், சித்தோடு-ல் நடைபெற உள்ளது. ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள் நூறு நாள் வேலைத் திட்டத்தில் இருப்பவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள்இ சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். பயிற்சி பெற தமிழில் எழுத, படிக்க தெரிந்திருக்க வேண்டும். வயது வரம்பு 18 முதல் 50 வயது வரை. பயிற்சி தினந்தோறும் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை (ஞாயிறு தவிர) நடைபெறும், பயிற்சிக்கு கட்டணம் எதுவும் இல்லை. மேலும் தங்கும் விடுதி, உணவு, சீருடை மற்றும் பயிற்சி உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படும். பயிற்சி மேலும் விவரங்களுக்கு பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சி நிலைய தொலைபேசி எண்கள் : 0424 2400338, 8778323213, 7200650604, 9489043925 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

# ஞானேஷ் குமாரை கண்டித்து சென்னையில் அக்.15ல் 'இந்தியா கூட்டணி' ஆர்ப்பாட்டம்




சென்னை: எஸ்.ஐ.ஆர். குளறுபடி விவகாரத்தில் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வலியுறுத்தி, இந்தியா கூட்டணி கட்சிகள் சார்பில் அக்டோபர் 15-ஆம் தேதி சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளதாக தமிழ்நாடு காங்கிரஸ்கமிட்டிதலைவர் மாணிக்கம் தாகூர் அறிவித்துள்ளார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகளில்குளறுபடிகள் நடைபெற்றதாக எழுந்த குற்றச்சாட்டில், இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி விலகக் கோரி நாடு முழுவதும் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், இந்தியா கூட்டணி கட்சிகளின் சார்பிலும் எஸ்.ஐ.ஆர் மற்றும் ஞானேஷ் குமாரை கண்டித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கடந்த செப்டம்பர் 30-ஆம் தேதி டெல்லியில் நடைபெற்ற இந்தியாகூட்டணி கட்சிகளின் ஆலோசனை கூட்டத்தில் அக்டோபர் 2 முதல் 8 வரை மாவட்ட தலைநகரங்களில் போராட்டங்கள் நடத்தவும், 6-ஆம் தேதி இந்திய தேர்தல் ஆணையத்தை முற்றுகையிடவும் முடிவு எடுக்கப்பட்டது.

சென்னையில் அக்.15-ல் ஆர்ப்பாட்டம்

இதனையடுத்து, இது தொடர்பாக தமிழகத்தில் போராட்டம் நடத்துவது குறித்து தமிழ்நாட்டின் இந்தியாகூட்டணி கட்சிகளின் ஆலோசனை கூட்டம் சென்னை ராயப்பேட்டையில் உள்ள காங்கிரஸ் கட்சியின் தலைமை அலுவலகமான சத்தியமூர்த்தி பவனில் (அக்.3) நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாணிக்கம்தாகூர் எம்பி, வி.சி.க தலைவர் திருமாவளவன் எம்பி, த.வெ.க அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுனா, மரிய வில்சன், ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலசெயலாளர்சண்முகம், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் மாநிலச் செயலாளர் அபூபக்கர், இந்திய கம்யூனிஸ்ட் சார்பில் அக் கட்சியின் தேசியசெயற்குழுஉறுப்பினர் ரவீந்திரநாத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்தை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்ததமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் மாணிக்கம் தாகூர், "எஸ்.ஐ.ஆர் என்ற பெயரில் இந்திய ஜனநாயகத்தை குழி தோண்டி புதைக்கும் வகையிலும், வாக்காளரின் வாக்குரிமைகளை பறிக்கும் வகையிலும் இந்திய தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை கருவியாக பயன்படுத்தும் பா.ஜ.கவை இந்தியா கூட்டணி வன்மையாக கண்டிக்கிறது.

ஞானேஷ் குமாரை உடனடியாகபதவிநீக்கம் செய்ய வேண்டும். எஸ்.ஐ.ஆர் விவகாரத்தில் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் சென்னையில் அக்டோபர் 15 ஆம் தேதி இந்தியாகூட்டணிகட்சிகள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் இந்தியா கூட்டணியின் தமிழ்நாடு கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்பார்கள். 'ஜனநாயகம் காப்போம்' என்ற பெயரில் அக்டோபர் 13, 14 ஆகிய தேதிகளில் தமிழ்நாட்டின் மாவட்ட தலைநகரங்களில் இந்தியா கூட்டணி பங்கு பெறும் ஆர்ப்பாட்டங்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஜனநாயகத்தின் பேரழிவில் இருந்து பாதுகாக்கும் இந்த போராட்ட நடவடிக்கைகளுக்கு சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களும், ஒத்த கருத்துடைய அரசியல் கட்சிகளும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் பங்கேற்று ஆதரவு வழங்க வேண்டும்.

இந்தியா கூட்டணியில் இணைந்து பணியாற்ற தமிழக வெற்றிக் கழகம் முன் வந்துள்ளது. பா.ஜ.கவை எதிர்க்கும் அனைவரும் இந்தியா கூட்டணிக்கு வர வேண்டும். ஆர்.எஸ்.எஸ், பா.ஜ.க, அமித்ஷா, மோடி ஆகியோர் இந்தியாவின் ஜனநாயகத்தை காலி செய்யும் வேலையை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு எதிரான போராட்டம் தான் இது" என்றார்.



உத்தமர் அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு மாவட்டம், எலவமலை ஊராட்சி, அய்யம்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற கிராம சபா கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, (02.10.2026) அன்று பங்கேற்று சிறப்பாக பணியாற்றிய தூய்மைப்பணியாளர்களுக்கு சால்வை அணிவித்து கௌரவித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் (2.10.2026) அன்று சென்னை, கோயம்பேடு பேருந்து நிலையத்தில், வெற்றிப்பயணம் திட்டத்தினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, ஈரோடு மாநகராட்சி, மத்திய பேருந்து நிலையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பேருந்து சேவையினை கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் ஈரோடு மண்டலம் பொது மேலாளர் முத்துக்குமாரசாமி, துணை மேலாளர் வணிகம் ராஜேந்திரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# கோவை மாவட்ட நடிகர் சங்கத்தின் சார்பாக, கோவை பேரூர் பகுதியில் உள்ள தமிழ் கல்லூரியில் நடைபெற்ற முப்பெரும் விழா

## பல்வேறு கோரிக்கைகளை தமிழக அரசுக்கு முன் வைத்த நடிகர் சங்கத்தினர்



கோவை மாவட்டம் பேரூர் பகுதியில் உள்ள தமிழ் கல்லூரியில், கோவை மாவட்ட நடிகர் சங்கத்தின் 12 ஆம் ஆண்டுவிழா, தமிழ்நாடு நாடகம் மற்றும் நாட்டுப்புற கலைஞர் நல சங்கத்தின் கோவை மாவட்ட நான்காம் ஆண்டு விழா, நாடகத் தந்தைதவத்திருசங்கரதாஸ் சுவாமிகள் 159 ஆவது பிறந்தநாள் விழா, பத்மஸ்ரீ சுந்தராம்பாள் 118 வது பிறந்தநாள் விழா, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் 99 வது பிறந்தநாள் விழா, என முப்பெரும் விழாவாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கோவை மாவட்ட நடிகர் சங்கத்தின் நிறுவன தலைவர் அஜ்மீர்சாகுல் தலைமை தாங்கினார். இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக பேரூராதீனம் தவத்திரு சாந்தலிங்க அடிகளார், கலந்து கொண்டு நாடகக் கலைஞர்களின் திறன், மற்றும் திறமைகளை கண்டு வெகுவாக பாராட்டி அவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கினார். செய்தியாளர்களை சந்தித்து பேசிய கோவை மாவட்ட நடிகர் சங்கத்தின் நிறுவன தலைவர் அஜ்மீர்சாகுல் கூறியதாவது.. கோவையில் நடைபெறுவரும் இந்த முப்பெரும் விழாவில், தமிழகத்தில் உள்ள 38 மாவட்டங்களில் இருந்து கலைஞர்கள் இங்கு வந்துள்ளனர். இந்த விழா ஆண்டுதோறும் அக்டோபர் 2ம் தேதி காந்தி ஜெயந்தி அன்று நடைபெறுவது வழக்கம், இந்த கூட்டத்தில் தமிழக அரசு அங்கீகரித்த 110 கலையைசார்ந்தகலைஞர்களை வரவழைத்த அவர்களின் கலைத்திறனை பாராட்டி சிறப்பு செய்துவருவதாக கூறினார். நாட்டுப்புற கலைகளை ஊக்குவிக்கும் வகையில் நமது சங்கத்தின் சார்பாக கலைஞர்களுக்கு ஆண்டுதோறும் சிறப்பு விருதுகளும் வழங்கபட்டு வருகின்றது என்று கூறினார். இதனை தொடர்ந்து வேலூர் மாவட்ட நாடக நடிகர்கள் சங்க தலைவர் ராமகிருஷ்ணன் கூறியதாவது.

தமிழக அரசு இந்த கலைஞர்களுக்கு ஓய்வூதியம் 3000 ரூபாயில் இருந்து 5000 வழங்க வேண்டும் என்று பலமுறை கோரிக்கை விடுத்துள்ளோம் ஆனால் இதுவரை அரசு செவிசாய்க்கவில்லை, அரசு இதனை நிறைவேற்றி தர வேண்டும், இந்த கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்க வேண்டும், அரசு பேருந்தில் செல்ல 50 விழுக்காடு கட்டணத்தை அரசு வழங்கியுள்ளது இதனை, முழுமையாக தள்ளுபடி செய்து இந்த கலைஞர்களுக்கு இலவச பயண திட்டத்தை அரசு வழங்க வேண்டும் என்று கேட்டு கொண்டார். இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு நாடக மற்றும் நாட்டுப்புற கலைஞர்கள் சங்க மாநில தலைவர் தங்கவேலு, வேலூர் குடியாத்தம் பகுதியைசேர்ந்தசிவக்குமார், நாநில பொருளாளர் கொடுமுடு அன்னை பாலன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு



இந்தியத் தேர்தல் ஆணையமானது தனது 29.09.2026-ம் தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக, "சிறப்புத் தீவிரத் திருத்தப் பணி" (SIR) ஏற்கனவே நிறைவடைந்த மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளது:

தொடர் திருத்த நடைமுறையின் கீழ், விடுபட்ட வாக்காளர்கள் மற்றும் இளம்/முதல்முறையாகத் தகுதிபெறும் வாக்காளர்களை பதிவு செய்வதற்கான சிறப்பு முகாமினை தலைமைத் தேர்தல் அதிகாரி, மாவட்டத் தேர்தல் அதிகாரிகள் மற்றும் வாக்காளர் பதிவு அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும். "படிவம் 6-உடன் இணைக்கப்பட்டுள்ள "உறுதிமொழிப் படிவம்" (Declaration Form), சிறப்புத் தீவிரத் திருத்தக் (SIR) காலக்கட்டத்தில் மட்டுமேபயன்படுத்தப்படும்.

சிறப்புத் தீவிரத் திருத்தம் அல்லாத காலக்கட்டங்களில், "வாக்காளர் பதிவு விதிகள் 1960"-ன் படி பொருந்தக்கூடிய படிவங்கள் பயன்படுத்தப்படும்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்ட மற்றும் தகுதிவாய்ந்த இளைஞர்கள்/முதல் முறை வாக்காளர்களின் பெயர்களை பதிவு செய்வதற்கு ஈரோடு மாவட்டத்திற்குட்பட்ட 8 சட்டமன்ற தொகுதிகளின் வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த வாய்ப்பினை பயன்படுத்தி வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்ட நபர்கள் மற்றும் தகுதி வாய்ந்த இளைஞர்கள் / முதல்முறை வாக்காளர்கள் தங்கள் பெயர்களை பதிவு செய்யும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## நிலுவை பயிர்க் கடன் வசூல் தற்காலிகமாக நிறுத்திவைப்பு; தமிழ்நாடு அரசு அறிவிப்பு



கூட்டுறவு சங்கங்களில் நிலுவையிலுள்ள பயிர்க்கடனை வசூலிப்பது முற்றிலும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகதமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில்கூறப்பட்டுள்ளதாவது:-

கூட்டுறவு சங்கங்களில்விவசாயிகள்பெற்று நிலுவையிலுள்ள பயிர்க் கடன்கள் வசூலிக்கப்படுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிவிப்பு கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரால் மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் மேலாண்மை இயக்குனர்களுக்கு சுற்றறிக்கை வாயிலாக அனுப்பப்பட்டு, அனைத்து கூட்டுறவு சங்கங்களுக்கும் தவறாது கடைப்பிடிக்க ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், சில விவசாயிகளிடருந்து தொலைபேசி வாயிலாக நிலுவையிலுள்ள தங்களது பயிர்க் கடன்களை வசூலிக்கமுயற்சிப்பதாக புகார்கள் வந்த வண்ணம் உள்ளன.

எனவே, அனைத்து விவசாயிகளின் கவனத்திற்கு தெரிவித்துக் கொள்வதுயாதனில், கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகள் பெற்ற நிலுவையிலுள்ள பயிர்க்கடனை வசூலிப்பது முற்றிலும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

வாட்ஸ்அப் எண்

மேலும், நிலுவையிலுள்ள பயிர்க்கடன் வசூலிப்பது தொடர்பாக கூட்டுறவு சங்கத்திலிருந்து எவரேனும் விவசாயிகளை தொடர்புகொண்டால், தொடர்பு கொண்ட கைபேசி எண் மற்றும் கூட்டுறவு சங்கத்தின் விவரங்களை கூட்டுறவுத் துறையின் அதிகாரபூர்வ குறைதீர்வு எண்ணான (Official Grievance Redressal Number) 98840 00845 என்ற வாட்ஸ்அப் (WhatsApp) எண்ணில் புகார் அளிக்கலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உருவ கேலி; மு.க.ஸ்டாலின் வகிக்கும் பொறுப்புக்கு உகந்த செயல் அல்ல; சிபிஎம் கண்டனம்





தாராபுரம் தவெக வேட்பாளரை உருவ கேலி செய்யும் வகையில் பேசிய திமுக தலைவரும், முன்னாள் முதல்வருமான மு.க. ஸ்டாலினுக்கு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

தாராபுரம் இடைத்தேர்தல் பிரசாரத்தில் (அக்.2) ஈடுபட்ட திமுக தலைவர் மு.க. ஸ்டாலின்,

தவெகவேட்பாளர்சத்யபாமாவை உருவ கேலி செய்யும்வகையில்பேசினார். இதற்கு, தமிழக முதல்வரும், தவெக தலைவருமான ஜோசப் விஜய் உள்ளிட்டோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், மு.க. ஸ்டாலினின் பேச்சு அவர் வகிக்கும் பொறுப்புக்கு உகந்தது அல்ல எனக் கூறி மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் பெ. சண்முகம் இன்று கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி, அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

"உருவ கேலி செயலில் யார் ஈடுபட்டாலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கண்டித்து வந்திருக்கிறது.

மூத்த அரசியல் தலைவர், முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தாராபுரம் வேட்பாளர் குறித்து சொல்லி இருப்பது வன்மையான கண்டனத்திற்குரியது.

அவர் வகித்த, வகிக்கும் பொறுப்புக்கு உகந்த செயல் அல்ல என்பதை சுட்டிக் காட்டுகிறோம்" எனக் கூறியுள்ளார்.

## Manipur govt assures action on 'No NRC, No Census' demand, seeks cooperation




The Manipur government on Saturday assured action on the updation of the National Register of Citizens (NRC), saying the government had acknowledged the memorandum submitted by the Campaign for Just and Fair Delimitation (JFD), and appealed to the organisation to put its September 30 deadline on hold.

JFD is a civil body continuing its movement to fulfil a five-point charter of demands, especially the updation of the NRC with 1951 as the cut-off year to safeguard Manipur's indigenous population.

Manipur government spokesperson, Sapam Ranjan, made the remarks to the media at his residence in Konthoujam, Imphal West.

He said the government had acknowledged various memorandums submitted by the organisation and taken them seriously, adding that the govern ment was making efforts to turn the demands into action.

One key demand among the five points in the JFD memorandum is "No NRC, No Census", with the organisation demanding that the Manipur government urge the Central Government to update the NRC using 1951 as the cut-off year.

The government spokesperson said the government would like to continue its efforts to fulfil the demands in the public interest.

"I would like to appeal to the JFD to put the deadline on hold, and then let us all work together," Sapam Ranjan said.

He urged the people of Manipur to cooperate with what the government has been doing for Manipur's betterment and future.

"We are all in the same boat, and we will definitely take every matter with the utmost sincerity," he said, appealing to the JFD to cooperate with the government and work together for Manipur's progress.



## பெருந்துறையில் விசிக மாவட்ட செயற்குழுக் கூட்டம்: இலவச வீட்டுமனைப் பட்டா மற்றும் தாட்கோ கடன் உதவிகள் கோரி முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றம்

ஈரோடு மாவட்டம் பெருந்துறை சட்டமன்றத் தொகுதி விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட கட்சி அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர் வி.விஜயபாலன் தலைமையில் மாவட்ட செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்டத் துணைச்செயலாளர்கள் ஜெயக்குமார், அண்ணாமலை, கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் வரவேற்புரையாற்ற, பெருந்துறை சட்டமன்றத் தொகுதியின் அனைத்துப் பொறுப்பாளர்களும் திரளாகக் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் வி. விஜயபாலன் சிறப்புரையாற்றினார்.

இதில், பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஏழை, எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிடக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிப்பது, கோரிக்கை நிறைவேறாத பட்சத்தில் போராட்டம் நடத்துவது, பெருந்துறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் கட்சிக் கிளைகளை அமைத்து ஒவ்வொரு கிளையிலும் 50-க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைச் சேர்ப்பது, தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தாட்கோ மூலமாக கிடைக்க வேண்டிய அனைத்துக் கடன் உதவிகளையும் மாவட்ட ஆட்சியர் வாயிலாகப் பெற்றுத் தருவது மற்றும் தலைவர் எழுச்சித்தமிழர் ஆணைக்கிணங்க அனைத்துப் பொறுப்பாளர்களுக்கும் மாவட்ட நிர்வாகிகளுக்கும் வாழ்த்துகளைத் தெரிவிப்பது உள்ளிட்ட முக்கியத் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

இந்நிகழ்வில் மாவட்டப் பொறுப்பாளர்களான மாவட்டச் செயற்குழு உறுப்பினர் அமுதா, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் ராஜேஸ்குமார், மகளிர் மாவட்டச் செயலாளர்கள் ஜூலியட் வின்சிலி விஜயபாலன், பாலா நகர் ராதா, கே.ஆர். ராதா, இ.சி.எ.பா. மாவட்டச் செயலாளர்கள் நந்தினி, மணிகண்டன், பரமேஸ்வரன், ம.வி.இ. மாவட்டச் செயலாளர்கள் ராதா, வினீதா பாஸ்கரன், மாவட்டத்துணைச் செயலாளர்கள் கவிதா, ஜெனிபர் ரோஸ்லின் மேரி, விவேக்ஜெரோன், மகளிர்மாவட்டப்பொருளாளர் அம்சா, கிறிஸ்தவ சமூக நீதிப் பேரவை மாவட்ட அமைப்பாளர் நாச்சிமுத்து கொமரன், விவசாய பாதுகாப்பு இயக்க மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகர், தொ.வீ. முன்னணி மாவட்ட அமைப்பாளர்கள் அஜித், கௌதம், தொ.வீ.மு. மாவட்ட அமைப்பாளர் ஆமோஷ் (எ) பிரபுகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர். தொடர்ந்து, ஒன்றிய, நகர மற்றும் பேரூர் பொறுப்பாளர்களான பெருந்துறை மேற்கு ஒன்றியச் செயலாளர் ஜெகதீசன், கிழக்கு ஒன்றியச் செயலாளர் ரமேஷ்வீரன், வடக்கு ஒன்றியச் செயலாளர் குமார், சென்னிமலை ஒன்றியச் செயலாளர் நவீன்குமார், பெருந்துறை நகரச் செயலாளர் முருகசாமி, சென்னிமலை நகரச் செயலாளர் விஜயா, பெருந்துறை பேரூர் செயலாளர் லதாமணி, காஞ்சிக்கோயில் பேரூர் செயலாளர்கள் கந்தசாமி, சேகர் துரைசாமி, பெத்தாம்பாளையம் பேரூர் செயலாளர் தாமோதரன், இ.சி.எ.பா. ஒன்றியச் செயலாளர்கள் சரண்குமார், சங்கீதா, கிறிஸ்துவ சமூகநீதிப்பேரவை ஒன்றியச் செயலாளர் தீமோத்தேயு, இ.சி.எ. ஒன்றியச் செயலாளர் ஸ்ரீநாத், ம.வீ.இயக்க ஒன்றியச் செயலாளர் லதா, சென்னிமலை ஒன்றியத்துணைச்செயலாளர் ஜெபராஜ், ஊத்துக்குளி வடக்கு ஒன்றிய செயலாளர் ர.குமார், தெற்கு ஒன்றிய செயலாளர் சதீஸ் பாண்டு, மத்திய ஒன்றிய செயலாளர் அய்யாவு, ஒன்றிய துணை செயலாளர் சிவகுமார், குன்னத்தூர் நகர செயலாளர் மூர்த்தி, பெருந்துறை பேரூர் துணைச் செயலாளர் ரவிச்சந்திரன், காஞ்சிக்கோயில் பேரூர் துணைச் செயலாளர் சின்னச்சாமி, கருமாண்டி செல்லிபாளையம் பேரூர் துணைச் செயலாளர் பிராபாகரன், பெருந்துறை மேற்கு ஒன்றியத்துணைச்செயலாளர்கள் சௌந்தர், அபிராமி ஸ்ரீநிதி, அட்சயா, பெருந்துறை பேரூர் பொருளாளர் மகேந்திரன், பெருந்துறை கிழக்கு ஒன்றியப் பொருளாளர்கள் ஜீவா, தனலட்சுமி, பெருந்துறை ஒன்றிய அமைப்பாளர் சென்னியப்பன் மற்றும் கட்சி நிர்வாகிகள் ரவிக்குமார், காட்சன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்;

இறுதியாக மாவட்டத் துணைச் செயலாளர் ஜெயக்குமார் நன்றியுரை ஆற்ற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

## திருப்பதி அருகே மருந்து தொழிற்சாலையில் 'பாய்லர்' வெடித்து விபத்து தமிழகத்தை சேர்ந்த ஒருவர் உட்பட 5 பேர் உயிரிழப்பு



திருப்பதி:

ஆந்திர மாநிலம், திருப்பதி மாவட்டம், ஸ்ரீ சிட்டி சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அமைந்துள்ள பிரபல மருந்து தயாரிப்பு ஆலையில் பாய்லர் வெடித்த விபத்தில் தமிழ்நாட்டை சேர்ந்த ஒருவர் உள்பட 5 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

ஸ்ரீ சிட்டி பகுதியில் அமைந்துள்ள டிஐஎல் ஹெல்த்கேர் என்ற மருந்து தயாரிப்பு நிறுவனத்தில் இன்று காலை சுமார் 8 மணியளவில் வழக்கம் போல பணிகள் நடந்து கொண்டிருந்தன. இரவுப் பணியில் இருந்த தொழிலாளர்கள் தங்களின் பணியை முடித்து விட்டு வெளியேற தயாராகி கொண்டிருந்த வேளையில், திடீரென அங்கிருந்த வாட்டர் பாய்லர் பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறியது.

தொழிற்சாலை கட்டிடத்தின் கான்கிரீட் மேற்கூரையின் ஒரு பகுதி முற்றிலும் இடிந்து விழும் அளவுக்கு இந்த பாய்லர் வெடித்து சிதறியது. இதனால் இடிபாடுகளுக்குள் பல தொழிலாளர்கள் சிக்கிக் கொண்டனர்.

விபத்து குறித்து தகவல் அறிந்தவுடன் காவல் துறையினர், தீயணைப்புப் படையினர் மற்றும்அவசரகால மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து இடிபாடுகளுக்குள் சிக்கிய தொழிலாளர்களை மீட்டனர்.

இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே 2 தொழிலாளர்களும், மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் 2 தொழிலாளர்களும் உயிரிழந்தனர். மேலும் பல தொழிலாளர்களுக்கு மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதில் மேலும் ஒரு தொழிலாளி உயிரிழந்தார். இதனையடுத்து பாய்லர் வெடித்த விபத்தில் உயிரிழந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 5 ஆக உயர்ந்துள்ளது.

உயிரிந்தவர்களில் ஒருவர், திருப்பதி சத்தியவேடு மண்டலத்தில் உள்ள செறிவி கிராமத்தை சேர்ந்த சின்ன மஸ்தான்(45) என்பதும், மற்றொருவர், சென்னையை அடுத்த கும்மிடிப்பூண்டி அருகே உள்ள மாதர்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த ரமேஷ்(45) என்பதும் தெரியவந்துள்ளது. மற்றவர்களை அடையாளம் காணும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த துயர சம்பவம் குறித்து ஆந்திர மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு மிகுந்த அதிர்ச்சியும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துள்ளார். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யுமாறும், காயமடைந்தவர்களுக்கு சர்வதேச தரத்திலான மருத்துவச் சிகிச்சையை உறுதி செய்யுமாறும் மாவட்ட ஆட்சியர் மற்றும் அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

விபத்துக்கான சரியான காரணம் குறித்து அறியகாவல்துறையினர் மற்றும் தொழிற்சாலை பாதுகாப்புத் துறையினர் தீவிர விசாரணையை தொடங்கியுள்ளனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.